# சட்டப் பேரவையில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அதிக நேரம் பேச வாய்ப்பளித்து, ஆளுங்கட்சி உறுப்பினர்களின் நேரத்தை விட்டுக் கொடுத்து உதவியவர், நமது முதலமைச்சர்!

## பேரவைத் தலைவர் மு.அப்பாவு உரை.. 13 ஆம் பக்கத் தொடர்ச்சி

உறுப்பினர்களை, இந்த அவையிலே அவர்கள் வந்து செயல்படுவதற்கு அனுமதி அளித்தது இந்த சட்டமன்ற வரலாற்றிலேயே, இன்றைய முதலமைச்சருடைய பெருந்தன்மையை (மேசையைத் தட்டும் ஒலி) இன்றும் எல்லோரும் நாம் பறைசாற்றுகின்ற வண்ணம் இருக்கின்றது.

**இந்தியாவின் மற்ற மாநிலங்களின் வழிகாட்டி முதல்வர்!**

இந்திய அரசியலமைப்புச் சட்டத்திற்குட்பட்டு ஆளுநர் உரையை வாசிக்காமல், விடுத்தும், சேர்த்தும் படித்தபோது, மாநில அரசால் தயாரிக்கப்பட்ட உரையை மட்டுமே அவைக் குறிப்பில் இடம்பெற செய்யவேண்டுமென்ற தீர்மானத்தை நிறைவேற்றி, இந்தியாவின் மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டியவர் முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட இப்பேரவை நிறைவேற்றிய சட்ட மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்காமல் ஆளுநர் கிடப்பில் போட்டபோது, துவண்டு விடாமல், துணிந்து நின்று முதலமைச்சர் அவர்கள் நீண்ட சட்டப் போராட்டம் நடத்தி, ஆளுநர் ஒப்புதல் அளிக்காத 10 மசோதாக்களுக்கு, ஒப்புதல் கொடுக்கப்பட்டதாக கருதக்கூடிய வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பை, உச்சநீதிமன்றத்தில் பெற்று தந்தவர், இன்றைய முதலமைச்சர் அவர்கள் என்பது நாடே பாராட்டுகின்ற விஷயம். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோன்று, தொடர்ந்து நீண்ட சட்டப் போராட்டம் நடத்தி, மருத்துவ முதுகலை பட்ட மேற்படிப்பு படிக்கின்றவர்களுக்கு OBC, பிற இதர பிற்படுத்தப்பட்ட பிரிவினருக்கு, ஒன்றிய அரசு வந்தபின்பு, அவர்களுக்கு அது மறுக்கப்பட்டபோது, அதற்கும் சட்டப்போராட்டம் நடத்தி, உச்ச நீதிமன்றத்தில் அனுமதிப் பெற்றுத்தந்து, கடந்த 3 ஆண்டு காலமாக, பல ஆயிரம் மாணவர்கள் OBC பிரிவை சேர்ந்தவர்களுக்கு மருத்துவ

> **அதிகாரம் என்பது ஆளுவதற்கான கருவி அல்ல; மக்களை உயர்த்துவதற்கான பொறுப்பு என்பதை இந்த ஆட்சி தொடர்ந்து வலியுறுத்தி செயல்பட்டது.**

முதுகலை பட்ட மேற்படிப்பு அவர்களுக்கு படிப்பதற்கு வாய்ப்பை இந்தியாவிற்கே பெற்றுக்கொடுத்தவர் இன்றைய முதல்வர் அவர்கள் என்பது தமிழுக்கும், தமிழ்நாட்டிற்கும், தமிழ்நாடு முதல்வருக்கும் பெருமை. (மேசையைத் தட்டும் ஒலி)

**“அரிட்டா பட்டியில் பா.ஜ.க. கைவைத்தால் என் பதவியை இழக்கவும் தயங்க மாட்டேன்” – என்று அறிவித்த நெஞ்சுரம்!**

மாநிலப் பட்டியலில் இடம்பெற்ற அரியவகை கனிமங்கள், கூட்டுறவு வங்கிகள் மற்றும் கடலில் மீன் பிடித்தல் போன்றவற்றை மத்தியப் பட்டியலுக்கு, எந்தவிதமான அரசமைப்புச் சட்டத்திலும் மாற்றங்கள், திருத்தங்கள் கொண்டு வராமல், Executive Order மூலம் அவைகளையெல்லாம் மாநில அரசினுடைய உரிமைகளை, மாநிலப் பட்டியலில் இருப்பதை அவர்கள் எடுத்தபோது, ஒன்றிய அரசு மாற்றிவரும் இந்த வேளையில், ஒன்றிய அரசின் இந்தப் போக்குத் தொடரக்கூடாது என்பதற்காகவே முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், ஒன்றிய-மாநில அரசுகளின் உறவு குறித்து ஆராய்வதற்காக நீதியரசர்

P.V. இராஜமன்னார் தலைமையில் குழு அமைத்ததுபோல் - இந்த நேரத்தில் இது தேவையா என்று இங்கு பலபேர் கேட்டார்கள். ஒன்றிய - மாநில அரசுகளின் உறவு

## இந்த அரசு, அறத்தையே தன் ஆட்சியின் அடிப்படையாகக் கொண்டு மக்களின் நலனை முன்னிலைப்படுத்திய அரசு!

குறித்து முன்னாள் நீதியரசர் குரியன் ஜோசப் தலைமையில் குழு தேவையா? எதற்காக தேவையென்று எதிர்க்கட்சிகள் கேட்டார்கள்; எந்த உள்நோக்கமும் அல்ல. ஏற்கெனவே, தற்போது இருக்கக்கூடிய ஒன்றிய அரசு நான் சொன்ன மூன்று துறைகளையும், கனிமவளம், அதேபோன்று கூட்டுறவுத் துறை, மீன் வளம் ஆகிய மூன்றையும் மாநிலப் பட்டியலிலிருந்து எடுத்தது தமிழக மீனவர்களுக்குச் செய்த மிகப்பெரிய துரோகம். சாகர் மாலா திட்டம் என்ற ஒரு திட்டத்தைக் கொண்டு வந்து, நம்முடைய உள்நாட்டு மீனவர்கள் 10 கிலோ மீட்டர் தூரம் வரைதான் மீன்பிடிக்கலாம், மீதி இடங்களில் மீன்பிடிக்கச் செல்லக்கூடாது.

இப்படிப்பட்ட கொடூர சட்டங்களையெல்லாம் தட்டிக் கேட்பதற்கு ஆள் இல்லை. முதல்வர் அவர்கள்தான், அரிட்டாப்பட்டியில் அந்தக் கனிம வளத்தை ஒன்றிய அரசு நம்மிடம் பறித்த அந்த உரிமையை வைத்து அவர்களுக்கு வேண்டியவர்களுக்கு அதைக் கொடுத்தபோது, இதே சட்டமன்றத்தில் அதைத் தடுத்து நிறுத்துவதற்கு நம்முடைய முதல்வர் அவர்கள் தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றியதோடு மட்டுமல்ல, ஒன்றிய அரசு அரிட்டாப்பட்டியிலே கனிமம் எடுக்க வந்தால் என்னுடைய முதலமைச்சர் பதவியைக்கூட நான் அதற்காக இழக்கத் தயங்க மாட்டேன் என்று சொன்னவர் நம்முடைய முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆகவே, மாநில அரசினுடைய உரிமைகள், மாநிலப் பட்டியலில் இருப்பதையெல்லாம் ஒன்றிய அரசு ஒரு Executive Order போட்டு எடுப்பதைத்தான் நம்முடைய முதல்வர் அவர்கள், இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத முதலமைச்சராய் நம்முடைய முதலமைச்சர் அவர்கள்தான் அதைத் தட்டிக் கேட்டார். ஒன்றிய-மாநில அரசுகளின் உறவுக்காகத்தான் நம்முடைய முன்னாள் நீதியரசர் குரியன் ஜோசப் தலைமையில் குழுவை அமைத்து, அக்குழுவின் அறிக்கை இந்த அவையில் வைக்கப்பட்டிருக்கிறது. நாடு முழுவதும் மாநில சுயாட்சியை விரும்பும் அனைத்து தலைவர்களாலும் இப்போது இப்பொருள் பேசுபொருளாக உருவாகியுள்ளது.

## ‘மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி’ என்ற கொள்கையில் முதலமைச்சர் அவர்கள் உறுதியான நிலைப்பாடு கொண்டு துணிவுடன் நிற்பதால் நாடே அவரை திரும்பிப் பார்க்கிறது!

**தமிழ்நாட்டில், ‘இந்தியா’ கூட்டணியின் தலைவர் மு.க.ஸ்டாலின்தான்!**

மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி என்ற கொள்கையில் முதலமைச்சர் அவர்கள் உறுதியான நிலைப்பாடு கொண்டு துணிவுடன் நிற்பதால் நாடே அவரைத் திரும்பிப் பார்க்கிறது. மகாராஷ்ராவில் உத்தவ் தாக்ரே அவர்களின் சிவசேனா கட்சியின் அதிகாரப்பூர்வ நாளேடான ‘சாம்னா’வில் இந்தியா கூட்டணியின் தலைவராக ஒருவர் வரவேண்டுமென்றால் தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் பொருத்தமானவர் என்று அந்தப் பத்திரிகை எழுதுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல, மூத்த காங்கிரஸ் தலைவர் மணிசங்கர் அய்யர் சொல்கிறார், இந்தியா கூட்டணியை வழி நடத்துவதற்கு சரியான ஒரு தலைவர் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் என்று சொல்கின்றார். (மேசையைத் தட்டும் ஒலி) அதோடு நின்றுவிடாமல், ராகுல் காந்தி பிரதமராக வேண்டுமென்றால், இந்தியா கூட்டணின் முழு நேர ஒருங்கிணைப்பாளராக முதலமைச்சர் அவர்கள் வரவேண்டும் என்று (மேசையைத் தட்டும் ஒலி) இந்தளவில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டில் மட்டுமல்ல இந்திய அளவில் தலைநிமிர்ந்து, இந்தியாவுக்கு சோதனைகள், ஆபத்துகள் ஏற்படும்போதெல்லாம், நெருக்கடி நிலை வந்தபோது தலைவர் கலைஞர் அவர்கள் எவ்வாறு அதற்காகக் குரல் கொடுத்து ஆட்சியை இழந்தார். ஆனால், நம்முடைய முதல்வர் அவர்கள் நின்று, ஆட்சியையும் கையிலே வைத்துக் கொண்டு, இந்திய அளவில் உள்ள அனைத்து முதல்வர்களையும் தன்னுடைய கொள்கைக்கு உடன்படக்கூடிய அளவிற்கு நிமிர்ந்து நிற்பதில் எங்களுடைய சுயமரியாதை இந்தியா முழுவதும் இப்போது இருக்கிறது என்பதைச் சொல்வதில் பெருமைக்கொள்கிறேன்.

**ரூ.500 கோடி செலவில் ஆயிரங்கால் மண்டபம்!**

இந்த நேரத்தில் ஒன்றை குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகின்றேன். நம்முடைய முதல்வர் அவர்கள் தேர்தல் அறிக்கையிலே திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெற்றால் தென் மாவட்டத்தில் மிக முக்கியமான ஆலயம் திருச்செந்தூர் சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் ஆயிரங்கால் மண்டபம் சரிசெய்யப்பட்டு குடமுழுக்கு நடைபெறும் என்று கூறினார். சுமார் ரூ.500 கோடி செலவு செய்து திருச்செந்தூர் சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் ஆயிரங்கால் மண்டபம் பத்தாண்டு காலமாக பழுதடைந்து கிடந்ததை (மேசையைத் தட்டும் ஒலி) சரி செய்து, குடமுழுக்கும் நடத்தியவர் இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள். முதலமைச்சர் அவர்களுடைய அந்தத் தேர்தல் அறிக்கை. நான் ஒன்றைதான் உதாரணத்திற்கு சொல்கிறேன். இவ்வாறு, அந்தப் புத்தகத்தை வைத்துக்கொண்டு நீங்கள் வாக்குறுதி நிறைவேற்றப்பட்டதா என்றால் இந்த அரசு எதையும் புறந்தள்ளவில்லை. சொன்ன வாக்குறுதிகளை நிறைவேற்றியதோடு மட்டுமல்ல; நெல்லை மாவட்டத்தில் கடலில் கலக்கின்ற நீர் வீணாகாமல் பயன்படுத்தும் வகையில் தாமிரபரணி-கருமேனியாறு-நம்பியாறு இணைப்புத் திட்டம் சுமார் 1,060 கோடி ரூபாயில் நிறைவேற்றப்பட்டது. இத்திட்டத்தை கலைஞர் அவர்கள் ஆரம்பித்தார் என்பதற்காக பாதி பணி முடிந்து மீதி பணி பத்தாண்டு காலமாக கிடப்பில் போடப்பட்டது. வெற்றி பெற்று வந்ததும் அந்த திட்டம் என்ன என்பதை கேட்டறிந்து சுமார் ரூ.1,060 கோடி கொடுத்து பணியை நிறைவேற்றித் தந்த முதல்வர் அவர்களை நான் உட்பட இரண்டு மாவட்ட விவசாயிகளும் பாராட்டுகின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி)

திருநெல்வேலி மாவட்டம் நாங்குநேரி, ராதாபுரம் சட்டமன்றத் தொகுதியில் குடிப்பதற்கு நீரில்லாதவர்களுக்கு சுமார் ரூ.1,028 கோடி செலவில் களக்காடு நகராட்சி, ஏர்வாடி, திருக்கறுங்குடி, நாங்குநேரி, மூலக்கரைப்பட்டி, பணகுடி, திசையன்விளை மற்றும் வள்ளியூர் போன்ற பேரூராட்சிகளுக்கு சுமார் 423 கோடி ரூபாய் செலவில் சென்னையில் இருப்பதுபோன்று அனைத்து வீடுகளுக்கும் ஏழை, பணக்காரன் என்கின்ற பாகுபாடு இல்லாமல் அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் இணைப்பு வழங்கி 80 சதவிகிதம் பணியை முடித்து தந்த முதல்வர் அவர்களுக்கு என்னுடைய நெல்லை மாவட்ட மக்கள் சார்பாகவும், தொகுதி மக்கள் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

வள்ளியூரிலே 504 ஏழை மக்களுக்கு அடுக்குமாடி குடியிருப்பு கட்டித் தந்தீர்கள். பணகுடியிலே 468 நபர்களுக்கு அடுக்குமாடி வீடு கட்டி அவர்களுக்கு தற்காலிக ஆணை வழங்கப்பட்டிருக்கின்றது. அதோடுமட்டுமல்ல வள்ளியூரிலே மாவட்ட தலைமை மருத்துவமனையை அமைத்து தந்திருக்கிறீர்கள். வள்ளியூரிலே கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தை தந்து

## இந்த அரசு, பெண்களின் முன்னேற்றத்தை தமிழ்நாட்டின் முன்னேற்றமாகப் பார்த்த அரசு!

வருகின்ற 24 ஆம் தேதி திறக்க இருக்கிறது. வள்ளியூர் பேரூராட்சி பகுதியில் 15 கோடியில் புதிய பேருந்து நிலையம். அதேபோன்று, அதன் அருகிலேயே பல கோடி ரூபாய் செலவில் காய்கனி மார்க்கெட். திசையன்விளையிலே District Munsif-cum-Judicial Magistrate Court. அங்குள்ள விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற முருங்கை போன்றவற்றை குளிரூட்டப்பட்ட அறையில் வைப்பதற்கு அறை. இவ்வாறு எண்ணற்றத் திட்டங்களை நம்முடைய முதல்வர் அவர்கள் தந்து, கடற்கரை கிராமங்களான கூடுதாழை, பெருமணல், கூட்டப்புளி போன்ற பகுதிகளில் தூண்டில் வளைவு அமைத்து தந்திருக்கின்றார்கள். தோமையார்புரம் பணி தொடர்பான கோப்பு மட்டும் முதல்வர் அவர்களுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. விரைவில் அரசாணை வந்துவிடும் என்று நம்புகிறேன். ஆகவே, இந்தளவிற்கு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பேரவைத் தலைவராக அல்லாமல் நானும் உங்களைப் போன்று சட்டமன்ற உறுப்பினராக இருந்திருந்தால் அப்போதைக்கப்போது நன்றி சொல்லியிருக்க முடியும். அந்த வாய்ப்பு எனக்கு இதுவரையில் கிடைக்கவில்லை என்றாலும், செய்தவற்றிற்கு நன்றியை இங்கு குறிப்பிட்டுச் சொல்லவில்லையென்றால், நான் நன்றி மறந்தவன் ஆகிவிடுவேன்.

நம்முடைய முதல்வர் அவர்கள் நாங்குநேரி, ராதாபுரம் சட்டமன்றத் தொகுதியிலுள்ள கிட்டத்தட்ட நம்முடைய கிராமப்புறத்திலுள்ள அனைத்து வீடுகளுக்கும் எவ்வாறு சென்னையில் குடிநீர் இணைப்பு கொடுக்கப்பட்டிருக்கிறதோ அதுபோல் அவர்களுக்கும் குடிநீர் இணைப்பை கொடுத்து நம்முடைய தாமிரபரணி ஆற்றிலிருந்து தண்ணீர் எடுத்துச்செல்வதற்கு ரூ.605 கோடி நிதியைத் தந்து நம்முடைய நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர், துணை முதலமைச்சர் அவர்கள் ஆகியோர் வந்து அடிக்கல் நாட்டி, அந்த பணியும் முடிவடைந்து முதல்வர் அவர்களுடைய திருக்கரத்தினால் ஆரம்பித்து வைக்க இருக்கின்றீர்கள்.

ஆக, தமிழ்நாட்டில் ராதாபுரம், நாங்குநேரி மட்டுமல்ல, பொருநையைத் தந்து நெல்லைக்கு பெருமை சேர்த்திருக்கின்றீர்கள். ஒவ்வொரு நாளும் ஆயிரக்கணக்கானவர்கள் வந்துகொண்டிருக்கிறார்கள். தமிழ்நாடு முழுவதும் தொழில் எங்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று சிலபேர் சொன்னார்கள். கங்கைகொண்டானில் Tata Power Solar-ல் 5,000 பேர் வேலை செய்கிறார்கள். அதேபோல அரவிந்த் நிறுவனம் solar panel-ஐ தமிழக முதல்வர் அவர்கள் ஆரம்பித்து வைத்துள்ளார்கள். VinFast நிறுவனம் மும்பை, பூனாவை சுற்றியிருக்கும் தொழில். தமிழ்நாடு முழுவதும் எல்லா இடங்களிலும் அந்த வாய்ப்பை முதல்வர் அவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள். இந்த ஒன்றை சொல்லி நிறைவு செய்கிறேன்.

**தொழில் தொடங்க ஏற்ற மாநிலம் தமிழ்நாடுதான்!**

ஒரு CII-Confederation of Indian Industry-ன் பொறுப்பாளர் ஒருவரை நான் சந்தித்தபோது சொன்னார், இந்தியாவில் தற்போது தொழில் தொடங்குவதற்கு ஏற்ற மாநிலம் தமிழ்நாடு தான். (மேசையைத் தட்டும் ஒலி) எதற்காக அதை சொல்கிறீர்கள் என்று கேட்டபோது அவர் சொன்னார், ‘பெங்களூரில் கூட்ட நெரிசல் இருக்கும்.

Container-னுடைய transportation, உற்பத்தி செய்வதற்கு பொருள் கொண்டுவருவதற்கும், உற்பத்தி செய்த பொருள்களை கொண்டு செல்வதற்கும் சென்னை உட்பட தமிழ்நாட்டில் அனைத்து பகுதிகளிலும் சரியான நல்ல நெடுஞ்சாலை வசதிகளை உருவாக்கித் தந்திருப்பதால் எல்லோரும் விரும்புகின்றார்கள். துறைமுகம் இருக்கின்றது, airport இருக்கின்றது,

அதோடு மட்டுமல்ல முதல்வர் அவர்களுடைய கல்வி முன்னெடுப்பால் படித்து, பட்டம் பெற்று, தகுதியான தொழிலாளர்கள் இருக்கின்றார்கள். தகுதியான தொழிலாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டாலும், அவர்கள் நேர்த்தியாக தொழில் செய்து, அந்த கம்பெனியினுடைய வளர்ச்சிக்கும், தங்கள் வளர்ச்சிக்கும் ஒத்துழைப்பு கொடுக்கக்கூடிய அளவிற்கு இந்த அரசு அவர்களுக்கு துணை நிற்கின்றது. ஆகவேதான் நான் சொல்கின்றேன், தொழில் துறையில் இப்போது எல்லோரும் வெளிநாடுகளிலிருந்து வருகின்றவர்களெல்லாம் அல்லது தொழில் தொடங்க முன்வருகின்றவர்களெல்லாம் தமிழ்நாட்டிற்குத்தான் வருகிறார்கள்.’

இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு சுமார் 17 இலட்சம் குறு, சிறு நடுத்தர தொழில்களை உருவாக்கியிருக்கிறது. முதலமைச்சர் அவர்கள், அவர்களுக்கு 30 முதல் 50 சதவிகிதம் மானியம் கொடுத்துள்ளார்கள். ஒரு கம்பெனிக்கு 2 பேர் வீதம் 34 இலட்சம் பேர் பணிபுரிகிறார்கள். இதுபோல், படித்தவர்கள் அனைவரும் படித்து முடித்தவுடன் - முன்பெல்லாம் ஒரு பக்கம் வேலை இருக்கும், இன்னொரு பக்கத்தில் படிப்பு இருக்கும். ஒருபக்கம் வேலை இல்லை என்பார்கள், மற்றொருபுறம் வேலைக்கு ஆள் இல்லை என்பார்கள். இரு பக்கங்களுக்கும் bridge ஆக நான் முதல்வன் திட்டம் தந்த முதலமைச்சர் அவர்களுக்கு உங்கள் சார்பாக நன்றியை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்பேரவையை நல்ல முறையில் நடத்திட பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் அமைதியாக இருந்து எனக்கு உறுதுணையாக இருந்தார். அவர்களுக்கும் மற்றும் மாற்றுத் தலைவர்கள் ஆகியோருக்கும், அதேபோல முன்னாள் கொறடாவாக இருந்த தம்பி கோவி. செழியன், இப்போது கொறடாவாக இருக்கின்ற ராமச்சந்திரன் உட்பட அனைவருக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

> **என்னுடைய பணியை இந்த அவையில் நிறைவேற்ற முழு சுதந்திரத்தையும் அளித்து, எவரது தலையீடும் கூடாது என ஆணையிட்ட முதலமைச்சர் அவர்களுக்கு நான் என்றென்றைக்கும் நன்றிக் கடன்பட்டிருக்கின்றேன்.**

ஏனைய பேரவை நிகழ்வுகளை இனிதே நிறைவேற்றவும், உறுப்பினர்கள் விவாதங்களிலே சிறப்பாக பங்கேற்கவும் உதவிபுரிந்த அமைச்சர் பெருமக்கள், அரசு தலைமைக் கொறடா, எவ்வளவோ இருந்தாலும் சில நேரங்களில் கட்டுப்பட்டு எனக்கு ஒத்துழைப்பு தந்த எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் எப்போதும் எனக்கு மிகச் சிறப்பாக ஒத்துழைப்பு தந்த முன்வரிசையில் இருக்கின்ற சட்டமன்றக் கட்சித் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் அனைவருக்கும் என்னுடைய கனிவான நன்றியை நான் அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

இழந்த ஜனநாயகத்தை மீட்டவர் இன்றைய முதல்வர் என்று பல ஊடகங்கள், பத்திரிகைகளிலே வெளிவந்த செய்திக்காக நான் அவர்களைப் பாராட்டுகிறேன்.

**முதல்வரின் நல்லாட்சிக்கான விதை மீண்டும் இன்று ஊன்றப்படுகின்றது!**

இன்றைக்கு உலக சமூக நீதி நாள். சமூகம், பொருளாதாரம் மற்றும் அரசியல் ரீதியாக மக்களிடையே நிலவும் ஏற்றத் தாழ்வுகளை களைந்து அனைவருக்கும் சமமான வாய்ப்புகள் கிடைக்க வேண்டுமென்பதை வலியுறுத்தவே இந்நாளின் முக்கியமான நோக்கமாகும். வறுமை ஒழிப்பு, வேலையின்மை, பிரச்சினைக்குத் தீர்வு, பாலின சமத்துவம் மற்றும் மனித உரிமைகளை பாதுகாத்தல் போன்றவற்றில் உலக நாடுகள் கவனம் செலுத்த வேண்டுமென்று ஐ.நா. சபை இந்நாளில் அறைகூவல் விடுக்கிறது. சாதி, மதம், இனம் மற்ற பாலின பாகுபாடற்ற ஒரு சமத்துவமான உலகத்தை படைக்க நாம் ஒவ்வொருவரும் உறுதியேற்க வேண்டிய தருணத்தில் இக்கொள்கை பிடிப்போடு அரசை நடத்திச் செல்லும், நம் முதலமைச்சர் அவர்களின் தொடர் நல்லாட்சிக்கான விதை மீண்டும் இன்று ஊன்றப்படுகிறது. 2.0 நிச்சயமாக நிறைவேறும்.

சட்டமன்ற தேர்தல் முடிவுக்குப் பின்பு முதலமைச்சர் அவர்கள் இரண்டாவது முறையாக ஆசனத்தில் அமர்ந்து (மேசையைத் தட்டும் ஒலி) நாட்டு மக்களுடைய நற்பணிகள், விட்ட பணிகளைத் தொட்டு தொடர்வதற்கு மக்கள் தயாராக இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எல்லா மக்களும், ஒன்றைச் சொல்லி நிறைவு செய்கிறேன்.

ஒரு கோடியே 31 இலட்சம் பேர் மகளிர் உரிமைத் தொகை, 12 இலட்சம் பேர் புதுமைப் பெண், தமிழ்ப்புதல்வன் திட்டத்தில் மாதம் ஆயிரம் ரூபாய் பயன்பெறுகிறார்கள். 10 இலட்சம் பேர்களுக்கு மடிக்கணினி வழங்கப்படுகிறது. அடுத்த 10 இலட்சம் பேர்களுக்கு வழங்க இருக்கின்றார்கள். தினம் 57 இலட்சம் பேர் விடியல் பயணம் செல்கின்றார்கள். மக்களைத் தேடி மருத்துவம் 2 கோடியே 58 இலட்சம் பேர்கள் பயன்பெறுகிறார்கள்.

இவ்வாறு பயன்பெற்ற மக்கள் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எந்த வேட்பாளரைச் சொன்னாலும், அவருக்காக நாங்கள் வீடு, வீடாகச் சென்று வாக்கு சேகரித்து வாக்களிக்கிறோம் (மேசையைத் தட்டும் ஒலி) என்று பல கிராமங்களில் சொல்லிக் கொண்டிருக்கின்ற மக்களுக்கும் இந்தநேரத்தில் நன்றியைத் தெரிவித்து, மீண்டும் நம்முடைய முதல்வர் அவர்கள் முதலமைச்சராக ஆசனத்தில் அமருவார்கள். தொடர்ந்து தமிழக மக்களுக்கு நல்லாட்சி புரிவார்கள்.

இவ்வாறு பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள் குறிப்பிட்டார்.